## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 1-6 - வாணிலா முறுவல்
## (நைமிசாரணியம்)

998 * வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் * மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன் * அதனைப் பிழை எனக் கருதிப் * பேதையேன் பிறவி நோய் - அறுப்பான் **
ஏணிலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி * இளையவர் கலவியின் – திறத்தை *
நாணினேன் வந்து உன் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 1

999 சிலம்படி உருவிற் கருநெடுங்கண்ணார் * திறத்தனாய் அறத்தையே மறந்து *
புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கிப் * போக்கினேன் பொழுதினை – வாளா **
அலம்புரி தடக்கை ஆயனே! மாயா! * வானவர்க்கு அரசனே! * வானோர்
நலம் புரிந்து இறைஞ்சும் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 2

1000 சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து * சுரிகுழல் மடந்தையர் திறத்து *
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த தொண்டனேன் * நமன் தமர் செய்யும் **
வேதனைக்கு ஒடுங்கி நடுங்கினேன் * வேலை வெண்திரை அலமரக் கடைந்த *
நாதனே! வந்து உன் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 3

1001 வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து * பிறர் பொருள் தாரம் - என்றிவற்றை *
நம்பினார் இறந்தால் நமன் தமர் பற்றி * எற்றி வைத்து ** எரி எழுகின்ற
செம்பினால் இயன்ற பாவையைப் * பாவீ! தழுவென மொழிவதற்கு அஞ்சி *
நம்பனே! வந்து உன் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 4

1002 இடும்பையால் அடர்ப்புண்டு இடுமினோதுற்றென்று * இரந்தவர்க்கு - இல்லையே என்று *
நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன் அந்தோ! * நினைக்கிலேன் வினைப் – பயன் தன்னை **
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் * படுவதோர் கொடுமிறைக்கு – அஞ்சி *
நடுங்கி நான் வந்து உன் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 5

1003 கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து * திரிந்து நாய் இனத்தொடும் திளைத்திட்டு *
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன் * உணர்விலேன் ஆதலால் ** - நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித்திட்டேன் * பரமனே! பாற்கடல் கிடந்தாய்! *
நாடி நான் வந்து உன் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 6

1004 நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் * நீதி அல்லாதன - செய்தும் *
துஞ்சினார் செல்லும் தொல்நெறி கேட்டே * துளங்கினேன் விளங்கனி - முனிந்தாய்! **
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினில் பிரியா * வானவா! தானவர்க்கு என்றும்
நஞ்சனே! * வந்து உன் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 7

1005 ஏவினார் கலியார் நலிகவென்று * என் மேல் எங்ஙனே வாழுமாறு? * ஐவர்
கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன் * குறுங்குடி நெடுங்கடல் – வண்ணா! **
பாவினார் இன்சொல் பன்மலர் கொண்டு * உன் பாதமே பரவி நான் – பணிந்து * என்
நாவினால் வந்து உன் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 8

1006 ஊனிடைச்[1] சுவர் வைத்து என்பு தூண் நாட்டி * உரோமம் வேய்ந்து - ஒன்பது வாசல் *
தானுடைக் குரம்பை பிரியும் போது * உன்தன் சரணமே சரணம் என்று - இருந்தேன் **
தேனுடைக் கமலத் திருவினுக்கு அரசே! * திரை கொள் மாநெடுங்கடல் – கிடந்தாய்! *
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன் * நைமிசாரணியத்துள் - எந்தாய்! 9

1007 ***** ஏதம் வந்து அணுகா வண்ணம் நாம் எண்ணி * எழுமினோ தொழுதும் - என்று * இமையோர்
நாதன் வந்து இறைஞ்சும் * நைமிசாரணியத்து எந்தையைச் சிந்தையுள் – வைத்து **
காதலே மிகுத்த கலியன் வாயொலி செய் * மாலை தான் கற்று வல்லார்கள் *
ஓதநீர் வையகம்[2] ஆண்டு வெண்குடைக் கீழ் * உம்பரும் ஆகுவர் - தாமே 10

[1] ஊனுடை
[2] வையம்

**அடிவரவு:** வாணிலா சிலம்பு சூதினை வம்பு இடும்பையால் கோடிய நெஞ்சினால் ஏவினார் ஊன் ஏதம் அங்கண்